| Class | 370.1523 |
| --- | --- |
| No | R35 |

Klanasinghe

# வெளிநாட்டில் வேலை பார்க்கும் தாய்மாரின் பிள்ளைகள் எதிர்நோக்கும் கற்றல் இடர்பாடுகள் - கொழும்பு கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மொழி மூல பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

# LEARNING DIFFICULTIES FACED BY CHILDREN WHOSE MOTHERS WORK ABROAD - A RESEARCH BASED IN SELECTED TAMIL MEDIUM SCHOOLS IN COLOMBO EDUCATION ZONE

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் கல்விமுதுமாணிப் பட்டக் கற்கை நெறிக்கான பகுதித் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது

**M.M.FATHIMA RIMZA ( B.Ed )**
**University Of Colombo**

OPEN UNIVERSITY
74481

**DEPARTMENT OF SECONDARY AND TERTIARY EDUCATION**

**FACULTY OF EDUCATION**

**THE OPEN UNIVERSITY OF SRILANKA**

**OCTOBER 2020**

ERSITY OF SRI
LIBRARY

# ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வின் பிரதான நோக்கம் வெளிநாட்டில் வேலை பார்க்கும் பெண்களது பிள்ளைகள் எதிர்நோக்கும் கற்றல் இடர்பாடுகளை இனங்காணல் என்பதாகும். இப் பிரதான நோக்கத்தினை அடைவதற்காக, வெளிநாட்டில் வேலை பார்க்கும் பெண்களது பிள்ளைகளது கற்றலுக்கான சூழ்நிலைகள் எவ்வாறு உள்ளன; அப் பிள்ளைகள் தமது தேவைகளை நிறைவு செய்வதில் எத்தகைய சவால்களை எதிர்நோக்குகின்றனர்; அப் பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்த முன்வைக்கக்கூடிய ஆலோசனைகள் யாவை; என்னும் உப நோக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

இவ் ஆய்வு கொழும்பு கல்வி வலயத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடிச் சென்றுள்ள தாய்மாரின் பிள்ளைகளின் கல்வியடைவு பற்றியதாகும். இவ் ஆய்வானது அளவீட்டு ஆய்வு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வின் மொத்த குடித்தொகை 150 பேர் ஆகும். இவர்களில் எளிய எழுமாற்று முறையில் 130 மாணவர்கள் மற்றும் 20 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். லைக்கேட்டின் அளவிடை முறையினைப் பயன்படுத்தி வினாக்கொத்துக்கள் தயாரிக்கப்பட்டு மாணவர்கள், ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள் Ms.Excel விரிவுத்தாள் மென்பொருள் பயன்படுத்தப்பட்டு எண் பெறுமானமாகவும் சதவீதமாகவும் அட்டவணைகளாக முன்வைக்கப்பட்டு பொருத்தமான வகையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

இவ் ஆய்வின் பிரதான கண்டறிதல்களாக, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள தாய்மார் வெளிநாட்டு வேலைவாய்ப்பை நாடிச் செல்வதால் அவர்களது பிள்ளைகள் தம் கற்றல் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பாரிய சவால்களுக்கு முகங்கொடுக்கின்றமையைக் குறிப்பிடலாம். இந் நிலைமை அவர்களது கற்றலில் பாரிய பின்னடைவினை ஏற்படுத்தியுள்ளமையை இவ் ஆய்வின் முடிவாகக் கூறலாம்.

குடும்பத்தவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் என்போருக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விருப்பத்தினை இழிவளவாக்கி தாய்மார்களை வலுவூட்டுவதன் மூலம் பிள்ளையின் கல்வியடைவில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பது ஆய்வின் விதந்துரைகளாக முன்வைக்கப்படுகின்றன.



RSITY OF S
RARY

